O.S. No. 150/2022 நாள்: 18.11.2025

நீலகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2025 ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 18 ம் நாள் **வாதி தரப்பு சாட்சி சீதா PW**-3 என்பவரின் சாட்சியம் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி. ராமலட்சுமி, உதவியாளர் நிலை-3 என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **சீதா** | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ரங்கன் | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | 63 |
| தாலூக்கா | : | | சாதி | : | |

---

**வாதி தரப்பு முதல் விசாரணை :**

1. நான் இந்த வழக்கில் **வாதி தரப்பு சாட்சி** ஆக அழைப்பாணை மூலம் ஆஜராகியுள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தை நான்தான் தயாரித்தேன். எனக்கு மோகன் மற்றும் ஜோகி ஆகியோர்களை தெரியும். மோகன் மற்றும் ஜோகி ஆகியோர் வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் கிரைய தொகையை பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தி என் முன்புதான் கையொப்பம் செய்தார்கள்.

**2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

2. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்திற்கும் 1. மோகன்குமார் 2. வீணா கொலாச்சினா மற்றும் 3. அங்கத்மேத்தா ஆகிய நபர்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் சொத்தினை விற்பனை செய்த நபரான ஜோகி என்பவர் அவரது குடும்ப சொத்தில் பாகப்பிரிவினை மூலம் அவருக்கு கிடைத்த சொத்தினைதான் வா.சா.ஆ.1 கிரையப்பத்திரம் மூலமாக விற்பனை செய்துள்ளதாக அந்த

ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஜோகி என்னிடம் அவ்வாறு பாகப்பிரிவினை ஏற்பட்டதை காண்பிக்க ஏதாவது ஆவணங்கள் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை.

3. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் மேற்படி ஜோகியுடன் பாகப்பிரிவினையில் பங்கேற்ற நபர்கள் யாரும் சாட்சிகளாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரையப்பத்திரமானது சர்வே எண்கள் 270 மற்றும் 273 கக்குச்சி கிராமத்தில் அமைந்துள்ள சொத்திற்காகத்தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்களில் பிழை உள்ளது என்று கூறி பிழைத்திருத்தல் பத்திரம் எதுவும் நான் தயாரித்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரையப்பத்திரமானது கக்குச்சி கிராமம் சர்வே எண்கள் 270 மற்றும் 273-ல் உள்ள சொத்துக்களை மட்டும்தான் கட்டுப்படுத்தும் என்றால் சரிதான்.

4. நான் வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தை தயாரிப்பதற்கு முன்பாக அதில் கூறப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பாக வில்லங்கம் உள்ளதா என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

**(3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் 2 ஆம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டதால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது).**

L. Prakash

Digitally signed by L. Prakash
Date: 2025.11.18 12:49:07 +0530